# Seerapuranam – சீறாப்புராணம்

தமிழில் எழுதப்பட்ட தலைச்சிறந்த இசுலாமிய இலக்கியம் சீறாப் புராணம் ஆகும். இந்நூல் இறைதூதர் நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாற்றை மையமாகக் கொண்டு தமிழ்மரபுகளைப் பின்பற்றி எழுதப்பட்ட ஒரு காவியம். இதனை இயற்றியவர் 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த உமறுப் புலவர் ஆவார். அதே காலத்தில் வாழ்ந்த வள்ளல் சீதக்காதி , அபுல்காசிம் ஆகியோரின் ஆதரவை உமறுப் புலவர் பெற்றார். வள்ளல் சீதக்காதியின் பெருமையைச் "செத்தும் கொடுத்தான் சீதக்காதி" என்ற சொற்றொடர் விளக்கும்.

இதன் ஆசிரியரான உமறுப்புலவர் , இந்நூலை முழுவதும் முடிப்பதற்கு முன்பே இயற்கை எய்திய காரணத்தால் , இதன் தொடர்ச்சியாக சின்னசீறா என்னும் நூலினை பனி அகமது மரைக்காயர் படைத்துள்ளார்.

| | |
|---|---|
| நூல் | சீறாப்புராணம் |
| ஆசிரியர் | உமறுப்புலவர் (இஸ்லாமிய கம்பர்) |
| பாடல் எண்ணிக்கை | 92 படலங்கள், 5027 விருத்தப்பாக்கள் |
| உரை எழுதியவர் | காசெய்குதம்பிப் பாவலர்.ப. |

## நூற்குறிப்பு

- சீறாப்புராணம் நபிகள் வாழ்க்கை வரலாற்றை கூறும் நூல்.
- சீறாப்புராணத்தை இயற்றிவர் உமறுப்புலவர்.
- இஸ்லாமிய கம்பர் எனவும் போற்றப்பட்டவர்.
- இவரின் தந்தை செய்துமுகமது அலி
- இவரை ஆதரித்தவர் வள்ளல் சீதக்காதி
- கீழக் கரையில் பிறந்தவர்
- எட்டையபுரம் அரசவைப் புலவராக விளங்கியவர்
- இவர் கடிகை முத்துப் புலவரது மாணவர்


அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

- வாலை வாரிதி என்னும் கவிஞரை பதினாறவது வயதிலேயே வாதாடி வென்றார்.
- இவரும் படிக்காசு புலவரும் சமகாலத்தவர்
- இவரை அமுதா கவிராசர் என்றும் அழைப்பர்
- அப்துல்காதிர் மரைக்காயர் எனப்படும் சீதக்காதி வள்ளலின் வேண்டுகோள்படி சீறாப்புராணத்தை எழுத தொடங்கினார் சீதக்காதி . மறைந்த விட்டதால் பின்னர் அபுல்காசிம் என்ற வள்ளலின் உதவியால் ) சீறாப்புராணம்80 பாடல்.நிறைவு பெற்றது (
- உமறுப்புலவர் முதுமொழி மாலை என்ற நூலையும் எழுதியுள்ளார்இவரின் . காலம் 17 நூற்றாண்டு.
- சீறா என்றால் “வாழ்க்கை”, புராணம் என்றால் “வரலாறு” என்று பொருள்படும்
- சீறாப்புராணம் விலாதத்துக் காண்டம், நுபுவ்வத்தக் காண்டம், ஹிர்ஜ்ரத்துக் காண்டம் என்னும் மூன்று பிரிவுகளை உடையது .92 படலங்கள் மற்றும் 5027 விருத்தப்பாக்களால் ஆனது.



அனைத்து போட்டித் தேர்வுகளுக்குமான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in